

# அமரர் இராமசாமி பேரம்பலம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

07-06-2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

c
rptkak;



மாதகலைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும்

கொண்ட

# அமரர் இராமசாமி பேரம்பலம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

**07-06-2011**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது குடும்பத் தலைவராக இருந்து

எமக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்து

கண்ணை இமை காப்பது போல்

எமைக்காத்து இவ்வையகத்தில் வாழ்வாங்கு

வாழ்ந்து தெய்வ பாதம் அடைந்த

எமது குடும்ப குலவிளக்கு அமரர் இராமசாமி

பேரம்பலம் அவர்களின் நீங்காத நினைவாக

இந்த நினைவுமலர் உங்கள்

திருப்பாதக் கமலங்களுக்கு

சமர்ப்பணம்

இங்ஙனம்

- குடும்பத்தினர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

திருச்சிற்றம்பலம்

விநாயகர் வணக்கம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## பஞ்ச புராணம்

### தேவாரம்

எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணினல்லால்
கண்ணிலேன் மற்றோர்களை கண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும் போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

### திருவாசகம்

சிந்தனை நின் தனக்கு ஆக்கி, நாயினேன் தன்
கண் இணை நின் திருப்பாதம் போதுக்கு ஆக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி, வாக்கு உன்
மணிவார்த்தைக்கு ஆக்கி, ஐம்புலகள் ஆர
வந்து எணை ஆட்கொண்டு உள்ளேபுகுந்து விச்சை
மால் அழுகப் பெரும் கடலே! மலையே! உன்னைத்
தந்தனை செந்தாமரைக்காடு அனைய மேனித்
தனிச்சுடரே! இரண்டும் இல் இத்தனியனேற்கே!


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை
நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ எலாப் போந்த
அன்று முதல் இன்று வரை
கையாரத் தொழுது அருவி
கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூமனத் தொண்டருள்ளீர்
சில்லாண்ட டிற்சிகை யுஞ்சில்
தேவர் சிறு நெறி சேராமே
வில்லாண் டகன கத்திரள்
மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

சென்றகா லத்தின் பழுநிலாத் திறமும்
இனியெதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்றபே றிதனால்
எற்றைக்கும் திருவரு ளுடையேம்
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்
நற்றமிழ் வேந்தனும் உயந்து
வென்றி கொள் திருநீற் றொளியினில் விளங்கும்
மேன்மையும் படைத்தனம் என்பார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் உயர்திரு இராமசாமி பேரம்பலம் அவர்களின் வாழ்க்கை வரலாற்று

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

இந்து சமுத்திரத்தின் மத்தியிலே நித்திலமென வர்ணிக்கப்படும் இயற்கை அழகில் எழில் கொஞ்சும் ஈழமணித்திருநாட்டிலே செந்தமிழும் சைவமும் வளர்த்த யாழ் மண்ணில் வடக்குப் புறமாக வனப்போடு அமைந்ததே மாதகல் பதியாகும். சங்கமித்தையின் வருகையால் சரித்திரப் புகழ்பெற்றதும் "யாழ்ப்பாண வைபவமாலை" எனும் நூல் பாடிய மயில்வாகனப் புலவர் வாழ்ந்ததும் மாதகலே. "மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" எனக் கூறிச் சைவத்தையும் தமிழையும் தம்உயிர் எனப்போற்றி நிற்கும் மக்கள் உதித்த பொன் விளையும் பூமி.

ஆற்றங்கரையிலே தீர்த்தக்கரையும் அரசடியில் அமர்ந்து ஆளுகின்ற விக்கினேஸ்வரர் ஆலயத்தோடு இயற்கை விருட்சமான கடம்பமரத்தடியில் எழுந்தருளி தடாகம் அருகே இருந்து குளிர்மையுடன் அரசாட்சி புரிந்து புதுப்பொலிவுடனும் கோபுர அழகுடனும் வயல்வெளிப்பரப்பில் வாழுகின்ற நுணசைப் பதியையும் பாரத நாட்டில் இருந்து கொண்டு வந்து வைத்த கண்ணகை அம்மன் சிலையுடன் இருந்து வீரம், செல்வம், கல்வி எனும் முழுச்செல்வங்களையும் அளித்து அருள்பாலிக்கும் புவனேஸ்வரி அம்பாள் ஆலயமும், இன்னும் காத்தல் தெய்வங்களான வைரவர், ஐயனார் ஆகிய தெய்வங்களோடு சைவ சமயமரபில் வாழுகின்ற சைவ வேளாண்குலத்தில் இனிய இல்லற வாழ்வுதனை நல்லறமாக்கி வாழ்ந்து வந்த அமரர் இராமசாமி தங்கம்மா தம்பதியினர்க்கு இராசம்மா (அமரர்) செல்வமுத்து, பேரம்பலம், வள்ளியம்மை (அமரர்), கந்தையா (கனடா) சண்முகசுந்தரம், சிந்தாமணி, துரைராசா (அமரர்) சோமசுந்தரம் எனும் ஒன்பதின்மார்களைப் பெற்றெடுத்தார்கள்.

இவர்களில் மூத்த புத்திரி அமரர் இராசம்மா இராமுப்பிள்ளையை மணந்து சிவசோதி (அமரர்) நாகேஸ்வரி (அமரர்), வீரசிங்கம் (அமரர்) கந்தசாமி (அமரர்), குணமலர், வசந்தராணி (அமரர்) பரராஜசிங்கம் (அமரர்) என்ற ஏழு பிள்ளைகளைப் பெற்று சீரும் சிறப்பாகவும் வாழ்ந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றார்கள். செல்வமுத்து சுபாரத்தினத்தை மணந்து செல்வராணி பாலச்சந்திரன் (அமரர்), இந்திராணி, விமலச்சந்திரன், இராமச்சந்திரன் (பிரான்ஸ்) என்ற மூன்று புத்திரர்களுடனும் இருபுத்திரிகளுடனும் வாழ்கிறார்.

வள்ளியம்மை கந்தசாமியை மணந்து வசந்தராணி, பாஸ்கரன் (ஜேர்மனி), ஜெயராணி, விஜயராணி என்ற மூன்று புத்திரிகளையும் ஒரு புத்திரனையும் பெற்று மாங்குளத்தில் மகிழ்வாக வாழ்கிறார்கள்.

கந்தையா வசந்தராணியை மணந்து சிவதாசன் (சுவிஸ்) சிவகாந்தன், சிவரூபன் என்பவர்களுடன் கனடாவில் சீரும் சிறப்புடனும் வாழ்ந்து வருகிறார்கள்.

சண்முகசுந்தரம் இராசமணியை மணந்து நெல்கொழிக்கும் திருநாடாம் வன்னி வளநாட்டின் முத்தையன்கட்டுப்பகுதியில் வாழ்ந்து வருகிறார்.

கடைசி தங்கையான சிந்தாமணி உறவினர்களுடன் வாழ்ந்து வருகிறார். துரைராசா கமலாதேவியை மணந்து இராசேந்திரமோகன், தர்சினி, (ஜேர்மனி) எனும் பிள்ளைச் செல்வங்களைப் பெற்று வாழ்ந்து வருகின்றார்கள்.

சோமசுந்தரம் மகேஸ்வரியை மணந்து குருபரன் (சுவிஸ்) கோமலர், ஜிஷாந்தன் என்ற புத்திரர்களைப் பெற்று மகிழ்வுடன் வாழ்கிறார்கள்.

இவர்களில் புதல்வர்களில் மூத்த புதல்வராகத் திகழ்ந்த பேரம்பலம் 1934 ஆம் ஆண்டு ஆனி மாதம் 10ம் நாள் அவனியிலே அவதரித்தார். இவர் தனது பள்ளிப்பருவத்தை அடைந்ததும் ஆரம்பக்கல்வியை விக்கினேஸ்வராக் கல்லூரியில் கற்றார். இவர் தனது ஆரம்பக் கல்வியுடன் நிறுத்திவிட்டு குடும்ப உயர்வுக்காய் விவசாயம், வியாபாரம் போன்றவற்றில் ஈடுபட்டு பொருளீட்டி பெற்றோருடனும் சகோதரர்களுடனும் அன்பாகவும், பாசமாகவும் வாழ்ந்து வந்தார். இவர் தனது வியாபாரத் தொழிலாக R.V.G பீடி, புகையிலைக் கம்பனியில் ஈடுபட்டிருந்தார். இவ்வாறு பொருள் வளத்தை ஈட்டி வளர்ந்து வாழ்ந்து வரும் காலத்தில் இவர் மணப்பருவம் எய்தினார். இதனால் பெற்றோர்கள் இவருக்கு இவ்வூரைச் சேர்ந்த அமரர் விநாசித்தம்பி இராசலட்சுமி தம்பதியர்களின் புத்திரர்களான மாசிலாமணி (அமரர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமேஸ்வரி, இராசரத்தினம், சந்திரா, தெய்வேந்திரம், கலாராணி, மகேந்திரன் என்பவர்களில் இளைய புத்திரியான சந்திராவைக் கைப்பிடித்து வைத்தனர்.

மாலையிட்ட நாள் முதலாக தம் இல்லற வாழ்வுதனை நல்லறமாகக் மேற்கொண்ட இவர் கடம்பேஸ்வரன் (சுவிஸ்) குமாரி(ஜேர்மனி), மஞ்சுளா, கரிகாலன் அமரர்) ஆகிய புத்திரர்களைப் பாசத்துடன் பெற்றெடுத்தார். பிள்ளைகளை நல்லமுறையில் கல்விபயில வைத்து வெளிநாட்டிற்கும் அனுப்பி வைத்து வாழ்வின் வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

புத்திரர்களில் மூத்த புதல்வரான கடம்பேஸ்வரன் திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்பதற்கிணங்க சுவிஸிற்கு அனுப்பி வைத்து வாழ்வை வளம்படுத்தும் வேளையில் மணப்பருவத்தை அடைந்ததும் அவருக்கு வேலணை அம்மன் கோவிலடியைச் சேர்ந்த நவரத்தினம் பாக்கியலட்சுமி தம்பதியர்களின் செல்வப்புதல்வியான ஜெயராணியை மணம் முடித்து வைத்தார். இவர்களின் இல்லற வாழ்வின் பயனதக கிரிஷாந், கிரிராஜ், பிருத்திகா எனும் பேரப்பிள்ளைகளை பெருமையுற் கண்டு பேரின்பம் அடைந்தார்.

மூத்த புத்திரி குமாரி மணப்பருவத்தை எய்தியதும் அவருக்கு ஊர்காவற்றுறை கரம்பன் பகுதியைச் சேர்ந்த செல்லத்துரை இராசம்மா தம்பதியர்களின் கடைசிப்புத்திரரான ஆனந்தராஜாவை மணம் முடித்து வைத்தனர். இவர்கள் தம்வாழ்வை நல்வாழ்வாக்கி ஜேர்மனியில் வாழ்ந்து வரும் வேளையில் ஸ்ரீபன், நிரோஸன், ராம்சன் ஆகிய புத்திரர்களைப் பெற்றெடுத்து இனிதே வாழ்ந்து வர காலம் செய்த கோலம்தனில் புற்றுநோய் காரணமாக மூத்தமருமகனை காலன் அவன் கவர்ந்த போதும் மகளின் வாழ்வு சிறக்க அரும்பாடுபட்டார்.

இளைய புதல்வியான மன்சுலா என்பவரை கிளிநொச்சி நகரின் நீர்வளமும் நிலவளமும் நிறைந்த கனகாம்பிகைக் குளத்தைச் சேர்ந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்கண்டு நாகேஸ்வரி தம்பதியர்களின் மூத்த புதல்வராக வந்துதித்த உதயகுமாரை மணம் முடித்து நிதர்ஷன், அனுதர்ஷன் ஆகிய நற்சீலர்களை பேரப்பிள்ளைகளாக கண்டு மனம் மகிழ்ந்தார். அதீத அன்பு கொண்டு இளைய மருமகனின் வாழ்வு சிறக்க பிரான்சிற்கு அனுப்பி பெருமகிழ்வு அடைந்தார்.

கடைசிப் புத்திரரான கரிகாலன் இவ்வூரைச் சேர்ந்த தேவராசா லீலாவதி தம்பதியர்களின் மூத்த புதல்வியான களாநிதி என்பவரை மணம்முடித்து மதுஷா எனும் செல்வப்புதல்வியைப் பெற்றெடுத்து வாழ்ந்து வரும் வேளையில் விதியின் முடிவிற்கு ஆட்பட்டமையால் காலன் அவர் உயிரை பறித்த பேரிடியை கேட்டு நிலைகுலைந்து போதும் பிள்ளைகளும் வாழ்விற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்.

இவ்வாறு புத்திரர்களையும் புத்திரிகளையும் நல்லமுறையில் சிறப்பான இடங்களில் மணம் முடித்து வைத்து பேரப்பிள்ளைகளையும் பார்த்து அவர்களுடன் இனிய மொழிகள் பேசி அன்பாகவும், பண்பாகவும், பாசத்துடனும் வாழ்ந்து வரும் வேளையிலே நோய் எனும் கொடிய நோய் இவரை வந்து வாட்ட அந்நோயிலிருந்து விடுபட முடியாது தவிர்த்து 08-05-2011 அன்று அமாவாசையை அடுத்து வந்த பஞ்சமித் திதியிலே புனர்பூச நட்சத்திரத்திலே இறைவனின் பாதார விந்தங்களைச் சேர்ந்தார். பேறு பெற்ற அவரின் ஆத்ம சீலத்திற்கு என்றும் பிரார்த்திப்போம்.

## மனித தர்மம்

மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளியுங்கள்
பிறரின் நலன்களில் அக்கறை காட்டுங்கள்
பிறர் சொல்வதை கூர்ந்து கவனியுங்கள்
பிறரது குறைகளைப் பேசாதீர்கள்
தாராளமாகப் பாராட்டுங்கள்
சிரித்த முகத்துடன் இருங்கள்
நகைச்சுவை உணர்வை வளர்த்துக் கொள்ளுங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவி புலம்பல்

கரம் பிடித்த நாள் தொடங்கி என்னை விட்டுப் பிரியாத தெய்வமே
ஒட்டிய உறவினிலே இரண்டறக் கலந்து விட்ட உயிரே
கண்ணுக்குள் என்னையும் செல்வங்களையும்
விண்ணுறையும் தெய்வம் போல் விழித்திருந்து காத்தவரே
எமை எல்லாம் தவிக்கவிட்டு எங்கு தான் சென்றீரோ?
பூவிழந்தேன் பொட்டிழந்தேன் புன்னகையும் நானிழந்தேன்
பார்தனில் விதவை எனும் நாமம் பெற்று விட்டேன்
நீரின்றி வாழும் பயிர் போல என்னைப்
பார்தனில் தவிக்க விட்டு ஏன் விண்ணுலகு சென்றீரோ?

# பிள்ளைகள் புலம்பல்

கண்மணிகளாய் எம்மைப் போற்றி கனிவு தந்த அப்பாவே
அருமருந்தாய் எமை போற்றி அரவணைத்த அப்பாவே
அழகிய புன்னகையில் அன்பான வார்த்தைகள்
கணீரென்று ஒலிக்க கண்டிப்புடன் வளர்த்தீர்கள்
பணிவும் ஒழுக்கமும் பண்புடன் கலந்தூட்டி
துன்பத்தால் துவண்டிடாமல் கண்ணை இமை காப்பது போல்
காத்து நின்றீரே அப்பா
கடைசி வரை இருந்து காப்பீர்கள் என கனவு கண்டோம்
எமையெல்லாம் கலங்க வைத்து காற்றாய் போனீர்களே
நித்தமும் உங்கள் வேதனையால்
மடை திறந்த வெள்ளம் போல் கண்ணிர் வழிகிறது
வாராயோ அப்பா எம்மைத் தேற்ற.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்கள் புலம்பல்

தக்கதொரு மருமகன்களாய், மருமகளாய் எமை ஏற்று
தரணியில் தனித்துவமாய் வாழ வைத்தீர்
மக்களுடன் இல்லறத்தில் மகிழச் செய்து
மனையறத்தை மதிப்போடு பேணச் செய்து
பக்குவமாய் பிள்ளைகட்டு பரிவு காட்டி
பண்பான நிலைக்கு எமை உயர்த்தி வைத்த
திக்கெல்லாம் புகழ்கொண்ட மாமா இனி
எப்போ உன் இன்முகம் காண்போம்.

# பேரப்பிள்ளைகள் புலம்பல்

எங்கள் கைபிடித்து நடை சொல்லித் தந்த தாத்தா
கரம் நீட்டி உணவு உடை தந்த எங்கள் தாத்தா
தாய் நீரோ தந்தை நீரோ என்று எண்ண வைத்த தாத்தா
தரணியிலே எம்மைத் தாங்கி நின்றீர் தாத்தா
படி படி என ஊக்கம் தந்தீர் தாத்தா
துடி துடி என எம்மைத் துடிக்க விட்டு
போன தெங்கே தாத்தா
விழி ஒன்றை இழந்த நாங்கள் இன்று
குருடராக நிற்கின்றோம் தாத்தா!
விழியாய் வருவீரோ என எதிர்பார்த்து நிற்கின்றோம்
பிறப்பொன்று உண்டேல் எங்கள் தாத்தாவை
எங்கள் தாத்தாவைத் தந்து விடுவாய் இறைவா

*அறிவு உன் தந்தை, அன்பு உன் அன்னை*
*அறம் உன் உடன்பிறப்பு, பொறுமை உன் மனைவி*
*பண்பு உன் மகள், ஆண்மை உன் மகன்*
*இதுவே உன் குடும்பம், இதனோடு இணைந்து வாழ்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவபுராணம்

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்.

## சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க! நாதன்றாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழிஆண்ட குருமனிதன் தாள்வாழ்க!
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க!
ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க!
வேகம் கொடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன் கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன்யான்
கண்நுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண் நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய் பாம்பாகிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்
செல்லா அ நின்ற இத்தாவர சங்கரத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யா விமலா விடைப்பாக வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமா னநாம் விமலா
பொய் ஆ யினவெல்லாம் போய்அகல வந்தருளி
மெஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்றமறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய் கலந்தாற்போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்ற
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையபய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையென் தன்னை
மறைந்திட முடியா மாயா இருளை
அறம்பாவம் என்னும் அருங் கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்து எங்கும் புழுஅடிக்கு மூடி
மலஞ் சோரும் உன்பது வாயிற் குடிலை
மலங்காப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்து உள்உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேசஅருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்
பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாம் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும்எங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தேற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று வழகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாணடி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை

வெண்டாமரைக் கன்றி நின் பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டாமரைக்குத் தகாது கொலோ
சகம் ஏழும் அளித்து
உண்டானுறங்க வொழித்தான் பித்
தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே!
சகலகலா வல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற்கொடியே
கனதனக் குன்று மைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே!
சகலகலா வல்லியே

அளிக்கும் செழுந்தமிழ் தெள்ளமுது
ஆர்ந்துன் அருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங் கொலோ
உளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகலகலா வல்லியே.

தூக்கும் பனுவற்றுறை தோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித் தருள்வாய்
வட நூற்கடலும்
தேக்கும் செழுந் தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே!
சகலகலா வல்லியே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நேடுந் தாட் கமலத்து
அஞ்சத் துவசம் உயர்த்தோன்
செந்நாவு ம் அகமும் வெள்ளைக்
கஞ்சத்தவி சொத் திருந்தாய்
சகலகலா வல்லியே.

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்த நல்காய்
எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங்காலு மன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகலகலா வல்லியே!

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கண்நல்காய்
உளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத் தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே!
சகலகலா வல்லியே!

சொல்லிற் பனமும் அவதானமும்
கவி சொல்ல வல்ல
நல்வித்தையும் தந்தடிமை கொள்வாய்
நளினாசனஞ் சேர்
செல்விக்கு கரிதென் றொருகாலமுஞ்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே!
சகலகலா வல்லியே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கும் பொருட்கும் உயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலந் தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோடு
அரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே!
சகலகலா வல்லியே!

மண் கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண் கண்ட ளவிற் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண் கண்ட தெய்வம் பல்கோடி யுண்டேனும்
விளம்பில் உன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ?
சகலகலா வல்லியே.

## வெற்றியின் இரகசியம்

| | |
|---|---|
| அன்பு காட்டு | ஆனால் அடிமையாகி விடாதே! |
| இரக்கங்காட்டு | ஆனால் ஏமாந்து போகாதே! |
| பணிவாய் இரு | ஆனால் கோழையாய் இராதே! |
| கண்டிப்பாய் இரு | ஆனால் கோபப்படாதே! |
| சிக்கனமாய் இரு | ஆனால் கஞ்சனாய் இராதே! |
| வீரனாய் இரு | ஆனால் போக்கிரியாய் இராதே! |
| சுறுசுறுப்பாய் இரு | ஆனால் பதட்டப்படாதே! |
| தர்மம் செய் | ஆனால் ஆண்டியாகி விடாதே! |
| பொருளைத் தேடு | ஆனால் பேராசைப்படாதே! |
| உழைப்பை நம்பு | ஆனால் கடவுளை மறந்து விடாதே! |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்புச் செயல்கள்

01. தகுந்தவர்களுக்குத் தானம் செய்

02. ஒழுக்க போதனைகளைப் பின்பற்று

03. நல்லெண்ணங்களைப் பின்பற்று

04. பிறருக்குப் பணிசெய் பிறரைக் கவனித்துக் கொள்

05. பெற்றோரையும் மூத்தோரையும் மதித்து நட அவர்களுக்கு வேண்டுவன செய்

06. உன் புண்ணியங்களாய் ஒரு பகுதியை பிறருக்குக் கொடு

07. பிறர் உனக்குக் கொடுக்கும் புண்ணியங்களை ஏற்றுக்கொள்

08. நல்ல கருத்துக்களை கேட்டு உயர்

09. நல்லெண்ணங்களை நினை.

10. நல்ல கருத்துக்களைப் பிறருக்குக் கற்றுக்கொடு. உன்குற்றங்களை நீக்கு.

# வாழ்க்கை

| | |
|---|---|
| வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் | - அதை நழுவ விடாதீர்கள் |
| வாழ்க்கை ஒரு விடுகதை | - அதை விடுவியுங்கள் |
| வாழ்க்கை ஒரு போராட்டம் | - அதை வென்று காட்டுங்கள் |
| வாழ்க்கை ஒரு போட்டி | - அதில் வெற்றி பெறுங்கள் |
| வாழ்க்கை ஒரு வேதனை | - அதைத் தாங்கிக் கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு சோகம் | - அதற்கு மனம் தளராதீர்கள் |
| வாழ்க்கை ஒரு பிரச்சனை | - அதற்குத் தீர்வு காணுங்கள் |
| வாழ்க்கை ஒரு பயணம் | - அதை வென்று முடியுங்கள் |
| வாழ்க்கை ஒரு விளையாட்டு | - அதில் ஈடுபடுங்கள் |
| வாழ்க்கை ஒரு வெகுமதி | - அதை ஏற்றுக் கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு கலை | - அதை அழகு படுத்துங்கள் |
| வாழ்க்கை ஒரு சவால் | - அதை எதிர்கொள்ளுங்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கியமானவை மூன்று

மதிக்க வேண்டிய மூன்று

- முதுமையானோர், மார்க்கம், சட்டம்

நேசிக்க வேண்டிய மூன்று

- நேர்மை, தூய்மை, கடின உழைப்பு

போற்ற வேண்டிய மூன்று

- அறிவு, அழகு, பண்பு

பேணி வளர்க்க வேண்டிய மூன்று

- திருப்தி, தைரியம், மனமகிழ்ச்சி

தவிர்க்க வேண்டிய மூன்று

- புகைத்தல், மதுவருந்துதல், சூதாட்டம்

அடக்க வேண்டிய மூன்று

- நா சோதனை கோபம்

கட்டாயம் கவனிக்க வேண்டிய மூன்று

- பேச்சு நடைமுறை செயல்கள்

ஆதரிக்க வேண்டிய மூன்று

- வாக்குறுதி, நட்பு, அன்பு

ஒழிக்க வேண்டிய மூன்று

- திருட்டு, சோம்பல், பொய்

விரும்ப வேண்டிய மூன்று

- கருணை, நற்குணம், மன அமைதி

வெறுக்க வேண்டிய மூன்று

- பெருமை, அநீதி, வாக்குமீறல்

தப்பித்துக் கொள்ள வேண்டிய மூன்று

- தீய எண்ணம், பொறாமை, பிடிவாதம்

அஞ்ச வேண்டிய மூன்று

- களவு, கோள், பொய்

எதிர்கொள்ள வேண்டிய மூன்று

- கவலை, பயணம், மரணம்

போரிட வேண்டிய மூன்று

- தேசம், கன்னியம், நட்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

*"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது*
*அன்றே மறப்பது நன்று"*

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்த எமது குடும்பத்தலைவர் அமரர் இராமசாமி பேரம்பலம் அவர்கள் இறந்த செய்தி கேட்டு எமது இல்லம் நாடி ஓடோடி வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் ஈமக்கிரியைகளிலும் இறுதி ஊர்வலத்திலும் கலந்து கொண்டவர்களுக்கும், மலர்தூவி அஞ்சலி செலுத்தியோர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும் உள்ளூர் வெளிநாடுகளிலிருந்து அனுதாபச் செய்தியை தந்தி, கடிதம், தொலைபேசி மூலம் தெரிவித்தவர்களுக்கும் அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் இந்நினைவு மலரை அச்சிட்டு உதவிய ஆர்.எஸ் பிரின்டேர்ஸ் ஸ்தாபனத்தாருக்கும் மற்றும் பலவழிகளிலும் முன்னின்று உதவி புரிந்தவர்களுக்கும் ஏனையோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

## இராமசாமி + தங்கம்மா

- இராசம்மா ❀ + இராமுப்பிள்ளை ❀
  - சிவசோதி ❀
  - நாகேஸ்வரி ❀
  - வீரசிங்கம் ❀
  - கந்தசாமி ❀
  - குணமலர்
  - வசந்தகுமாரி ❀
  - பரராஜசிங்கம் ❀
- செல்லமுத்து + சுபாரத்தினம் ❀
  - செல்வராணி
  - பாலச்சந்திரன் ❀
  - இந்திராணி
  - விமலச்சந்திரன்
  - இராமச்சந்திரன் (பிரான்ஸ்)
- **பேரம்பலம்**
- வள்ளியம்மை ❀ + கந்தசாமி
  - வசந்தராணி
  - பாஸ்கரன் (ஜேர்மனி)
  - ஜெயராணி
  - விஜயராணி
- கந்தையா (கனடா) + வசந்தராணி (கனடா)
  - சிவதாசன் (கனடா)
  - சிவகாந்தன் (கனடா)
  - சிவரூபன் (கனடா)
- சிந்தாமணி
- சண்முகசுந்தரம் + இராசமணி
- துரைராசா ❀ + கமலாதேவி
  - இராஜேந்திரமோகன்
  - தர்சினி (ஜேர்மனி)
- சோமசுந்தரம் + மகேஸ்வரி
  - குருபரன் (சுவிஸ்)
  - கோமலர்
  - ஜிசாந்தன்

## விநாசித்தம்பி + இராசலட்சுமி

- மாசிலாமணி ❀ + அன்னலட்சுமி ❀
  - தயாசலா
  - ஜெயாசலா (சுவிஸ்)
  - விஜயநிர்மலா (சுவிஸ்)
  - அஷோக்குமார் (சுவிஸ்)
  - இராஜகுமாரி
- பரமேஸ்வரி + தியாகராசா ❀
  - பஞ்சலட்சுமி
  - பாஸ்கரன் (ஜேர்மனி)
- இராசரத்தினம் + இந்திராணி
  - உதயகுமார்
  - பிரமகுமார்
  - கிருஸ்ணவேணி (கனடா)
  - சசிக்குமார்
- சந்திரா
- தெய்வேந்திரராஜா (ஜேர்மனி) + அமிர்தசீலி
  - கிரிஷாந் (ஜேர்மனி)
  - தீபன்
- கலாராணி + வேலுப்பிள்ளை
  - சசீந்திரன் (பிரான்ஸ்)
  - தர்சினி (பிரான்ஸ்)
  - அமிர்தா
  - சிவதாஸ் (சாரதி)
  - சிவசுதன் (பிரான்ஸ்)
- மகேந்திரன் (சுவீடன்) + சிவமதி (சுவீடன்)
  - அஜித், கஜானா, கஜந்தா, கஜீதா } சுவீடன்

## பேரம்பலம் + சந்திரா

- கடம்பேஸ்வரன் (சுவிஸ்) + ஜெயராணி (சுவிஸ்)
  - கிரிஷாந் (சுவிஸ்)
  - கிரிராஜ் (சுவிஸ்)
  - பிருத்திக்கா (சுவிஸ்)
- குமாரி (ஜேர்மனி) + ஆனந்தராஜா ❀
  - ஸ்ரீபன் (ஜேர்மனி)
  - நிரோஸன் (ஜேர்மனி)
  - ராம்சன் (ஜேர்மனி)
- மன்சுளா + உதயகுமார் (பிரான்ஸ்)
  - நிதர்ஷன்
  - அனுதர்ஷன்
- கரிகாலன் ❀ + தயாநிதி
  - மதுஷா

❀ அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும்
நன்றாக நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டுள்ளது
எது இன்று உன்னுடையதோ அது
நாளை மற்றொருவருடையதாகின்றது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

–பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்.எஸ். பிரின்டேர்ஸ், சண்டிலிப்பாய் தொ.பே: 0212240313